**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, மார்ச் - 2020**

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examinatio, March - 2020**

FWC

| தரம் :- 13 (2020) | வணிகக்கல்வி | புள்ளித்திட்டம் |
|---|---|---|

## பகுதி I

| | | |
|---|---|---|
| 1) 3 | 11) 2 | 21) 5 |
| 2) 1 | 12) 4 | 22) 3 |
| 3) 4 | 13) 1 | 23) 3 |
| 4) 3 | 14) 4 | 24) 1 |
| 5) 2 | 15) 5 | 25) 5 |
| 6) 5 | 16) 3 | 26) 1 |
| 7) 4 | 17) 2 | 27) 2 |
| 8) 3 | 18) 2 | 28) 4 |
| 9) 4 | 19) 4 | 29) 5 |
| 10) 3 | 20) 4 | 30) 1 |

**(30X2=60 புள்ளிகள்)**

31) அ)
- வணிக தேவை விருப்பங்களை நிறைவுசெய்தல்.
- வளங்களுக்கு பெறுமதி சேர்த்தல் (2x ½ = 1 புள்ளி)

(ஒழுங்குமுறை அவசியம்)

ஆ)
- சமூகம்
- ஊழியர் (2x ½ = 1 புள்ளி)

(ஒழுங்குமுறை அவசியம்)

32) அ)
- இறைக்கொள்கை.
- அதிகரிக்கும் (2x ½ = 1 புள்ளி)

(ஒழுங்குமுறை அவசியம்)

ஆ)
- நோக்கமொன்றிருத்தல்
- தனிநபர் காணப்படல். (2x ½ = 1 புள்ளி)

(ஒழுங்குமுறை அவசியம்)

33) அ)
- பரிமாற்றூடகம், பெறுமதிகளை அளவிடும் கருவி (2x ½ = 1 புள்ளி)

(ஒழுங்குமுறை அவசியமில்லை)

- பெறுமானத்திரட்டு, பிற்போடப்பட்ட கொடுப்பனவு ஊடகம். (2x ½ = 1 புள்ளி)

(ஒழுங்குமுறை அவசியமில்லை)

34) அ)
- வங்கிக்கடன்
- நிரந்தர வங்கி மேலதிக பற்று (2x ½ = 1 புள்ளி)

(ஒழுங்குமுறை அவசியம்)

ஆ)
- பங்களிப்பு
- பதிலான்வைப்பு (2x ½ = 1 புள்ளி)

(ஒழுங்குமுறை அவசியம்)

35) அ) தரிப்பிடம்
ஆ) சாதனம் / ஊடகம்
இ) சக்தி
ஈ) பாதை (4x ½ = 2 புள்ளிகள்)

36) அ) • தீர்மானமெடுத்தல்
• தடைகளை கையாளுபவர் (2x ½ = 1 புள்ளி)
(ஒழுங்குமுறை அவசியம்)

ஆ) • ஊக்கப்படுத்தல்
• தலைமைத்துவம் (2x ½ = 1 புள்ளி)
(ஒழுங்குமுறை அவசியம்)

37) அ) பொய்
ஆ) உண்மை
இ) பொய்
ஈ) உண்மை (4x ½ = 2 புள்ளிகள்)

38) அ) • நிலையான கிரயம்
• மாறும் கிரயம் (2x ½ = 1 புள்ளி)
(ஒழுங்குமுறை அவசியம்)

ஆ) • தரக்கட்டுப்பாடு
• இருப்புக்கட்டுப்பாடு (2x ½ = 1 புள்ளி)
(ஒழுங்குமுறை அவசியம்)

39) அ) • குடும்ப
• பொதிகட்டல் (2x ½ = 1 புள்ளி)
(ஒழுங்குமுறை அவசியமில்லை)

ஆ) • போட்டியாளரின் விலை
• கேள்வி (2x ½ = 1 புள்ளி)
(ஒழுங்குமுறை அவசியம்)

40) அ) • முதலாம்தர பங்குசந்தை
• இரண்டாம்தர பங்குசந்தை (2x ½ = 1 புள்ளி)
(ஒழுங்குமுறை அவசியம்)

ஆ) • வேலை விபரணம்
• வேலை குறித்துரைத்தல் (2x ½ = 1 புள்ளி)
(ஒழுங்குமுறை அவசியம்)

41)
- சமூகத்தினதும் மக்களினதும் நலன் பேணல்
- சந்தையில் நிலைத்திருத்தல்
- விற்பனையை உச்சப்படுத்துதல்
- சந்தைப்பங்கை அதிகரிக்கச் செய்தல்.
- பங்குகளின் சந்தைப்பெறுமானத்தை உச்சப்படுத்துதல்.
- வணிகரின் தனிப்பட்ட திருப்தி (4x ½ = 2 புள்ளிகள்)

42)
- இலாபம் பெறும் நோக்கம் ஒன்றிருத்தல்.
- வணிக நடவடிக்கையொன்றாக இருத்தல்.
- தனிநபர்கள் இருத்தல்.
- அன்னியோன்னிய இடைத்தொடர்புகள் இருத்தல். (4x ½ = 2 புள்ளிகள்)

43)
- செலவு குறைவடையும்
- வங்கி நேர நெருக்கடிகள் குறைவடையும்.
- உண்மைத்தன்மை உயர்வடையும்.
- ஊழியர் குழுவினரைக் குறைத்துக்கொள்ள முடிதல்.
- வங்கிச்சேவை விரிவடைந்து வங்கிகளின் இலாபத்தன்மை அதிகரிக்கும்.

(4x ½ = 2 புள்ளிகள்)

44)
- செய்தியின் தன்மை முழுமையானது
- முழுமையானது
- திருத்தமானது / செம்மையானது
- நெறி முறைகளுக்குட்பட்டது.
- உள்வாங்குபவருக்கு விளங்கிக் கொள்ளக்கூடிய ஆற்றல்.
- சுருக்கமான தன்மை
- உறுதியானது. (4x ½ = 2 புள்ளிகள்)

45) • இயற்கை வளங்கள் பகிரப்பட்டுள்ள முறைகளிலுள்ள முரண்பாடுகள்
- ஒப்பீட்டு ரீதியான கிரயநன்மைகள்
- சில உற்பத்திப் பொருட்கள் தொடர்பில் சில நாடுகளில் சட்ட ரீதியான ஏகாதிபத்தியம் காணப்படல்.
- பண்ட மேம்பாடு
- வியாபாரத் தடைகள் குறைவடைதல். (4x ½ = 2 புள்ளிகள்)

46) • தொழிற்பாட்டின் அடிப்படை
- உற்பத்திப் பொருள் அடிப்படை
- வாடிக்கையாளர் அடிப்படை
- புவியியல் அடிப்படை
- கலப்பு அடிப்படை
- செயல்முறை அடிப்படை (4x ½ = 2 புள்ளிகள்)

47) 1) மொத்த உற்பத்தித்திறன் = $\frac{\text{வெளியீடு}}{\text{உள்ளீடு}}$

2) மூலப்பொருள் உற்பத்தித்திறன் = $\frac{\text{வெளியீடு}}{\text{மூலப்பொருள்}}$

3) உழைப்பு உற்பத்தித்திறன் = $\frac{\text{வெளியீடு}}{\text{ஊழிய மணித்தியாலங்களின் எண்ணிக்கை}}$

4) இயந்திர உற்பத்தித்திறன் = $\frac{\text{வெளியீடு}}{\text{இயந்திர மணித்தியாலங்களின் எண்ணிக்கை}}$

(4x ½ = 2 புள்ளிகள்)

48) 1) பொருளின் தன்மை
2) சந்தையின் தன்மை
3) கேள்வியின் தன்மை
4) போட்டியாளர்களின் விநியோக வழிமுறை
5) உற்பத்தியாளரின் பலம்

(4x ½ = 2 புள்ளிகள்)

49) 1) நிதிச்சந்தை
2) நிதி நிறுவனங்கள்
3) நிதிக்கருவிகள்
4) நிதி உட்கட்டமைப்பு வசதிகள்
5) மத்திய வங்கி (4x ½ = 2 புள்ளிகள்)

50) 1) வெப்பத்திலிருந்து பாதுகாத்தல்
Protect from heat
2) பயன்பாட்டின் பின் வீசவும்
Keep Britain Tidy
3) வீழ்த்தக்கூடாது
Do not Drop
4) பாதுகாக்கப்பட்ட உணவு
Safery food (4x ½ = 2 புள்ளிகள்)

மொத்தம் 50x2=100 புள்ளிகள்

## பகுதி II – அ

**வினா இல 01**

01. 1) அ)
- விற்பனையினை உச்சப்படுத்துதல்.
- இலாபத்தினை உச்சப்படுத்துதல்

(2x1 =2 புள்ளிகள்)

ஆ)
- விற்பனை / பரிமாற்றம் இடம்பெறல்.
- தொடர்ச்சியாகவே மறைகாணி பொருத்திக் கொடுத்தல்.
- இலாபத்தினால் ஊக்கப்படுத்தப்படல்.
- போட்டியாளரின் அச்சுறுத்தல், உற்பத்தி தொழில்நுட்ப மாற்றம் போன்ற அச்சுறுத்தல்கள் / இடர் நிலவுதல்.
- மனித விருப்பங்களை நிறைவேற்றி வருதல்.
- பொருளாதார நடவடிக்கை ஒன்றாக இருத்தல்.

(4x½ =2 புள்ளிகள்)

2) அ)
- குறைந்த விலையில் கிடைக்கப்பெறல்.
- பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கல்.
- வீடுகளில் தொழில்களுக்கு சென்றுவருவோர் எண்ணிக்கை அதிகரித்தல்.
- நிறுவனங்களில் ஊழியர் எண்ணிக்கைகளை குறைக்க முடிதல்.
- எவையேனும் மோசடிகள் இடப்பெறின் இலகுவில் கண்டறிய முடிதல்.
- இலகுவாகவே கட்டளையிட்டு பொருத்திக் கொள்ள முடிதல்.

(4x1 =4 புள்ளிகள்)

3) அ) உற்பத்தி தன்மையடிப்படையில் - மூன்றாம் நிலை
உரிமையடிப்படையில் - தனியார் துறை
நோக்க அடிப்படையில் - இலாப நோக்குடைய
உற்பத்தி துறை அடிப்படையில் - சேவை
பருமன் அடிப்படையில் - சிறி, நடுத்தர

(4x½ =2 புள்ளிகள்)

ஆ) வாய்ப்புக்கள் :-
- வணிகர்கள், பாடசாலைகள், இல்லங்கள் மறைகாணி பொருத்துவது தொடர்பில் நாட்டம் அதிகரித்தல்.
- பாதுகாப்பு தொடர்பில் அதிக அக்கரை செலுத்துதல்.

(2x ½ =1 புள்ளி)

**அச்சறுத்தல் :-**
- புதிய போட்டி நிலைமைகள் அதிகரித்தல்.
- மறைகாணிகளின் வடிவங்களும், தொழில்நுட்பங்களும் அடிக்கடி மாற்றமுறுதல்.

(2x ½ =1 புள்ளி)

(வேறு பொருத்தமான விடைகளை கருத்தில் கொள்க)

4) **அனுகூலம் :-**

- அதிக வாடிக்கையாளர்களை கவர முடிதல்.
- சந்தைகள் விரிவடைதல்.
- கிரயங்கள் குறைவடைதல்.
- சந்தையில் இலகுவாக நுழைய முடிதல்.
- மேந்தலைக் கிரயம் குறைவு
- குறைந்த ஊழியர் எண்ணிக்கை.
- $\frac{24}{7}$ கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளலாம்.
- பாரியளவில் இடவசதி அவசியம் இன்மை.
- நேரம் சேமிக்கப்படல். (2x1 =2 புள்ளிகள்)

**பிரதிகூலம் :-**

- இணைய தளங்களை உருவாக்குவதற்கான ஆரம்பச் செலவு அதிகம்.
- தொடருறு வணிகம் தொடர்பில் நுகர்வோருக்கு நம்பிக்கை இன்மை.
- மோசடிகள் நிலவுதல்.
- சட்டரீதியான பிரச்சினைகள்.
- கொடுப்பனவு முறைகளில் பிரச்சனைகள் ஏற்படலாம்.
- தொழில்நுட்ப தடைகள்

(2x1 =2 புள்ளிகள்)

5) உரிமையாளர் :- போதிய இலாபம்
வணிக விருத்தி
சந்தைப்பங்கு

முகாமையாளர் :- வணிக இலாபத்தினை உச்சப்படுத்தல்.
வணிக விருத்தி
முகாமைத் தீர்மானங்களின் வெற்றி / தோல்வி

ஊழியர் :- உயர் சம்பளம்
ஊக்குவிப்பு கொடுப்பனவு
பதவி உயர்வு

வாடிக்கையாளர் :- தரமான பொருட்களும் சேவைகளும்
பொறுப்புக்களை உரியவாறு நிறைவேற்றுவதற்கு நீண்டகால வாழ்தன்மைக்கு.

வழங்குனர் :- தொடர்ச்சியான கட்டளைகள் பெற பொருட்களது பணத்தினைப்பெற

அரசு :- வரிகளை அறவிட
வேலை வாய்ப்பு

(நான்கு தரப்பினரை குறிப்பிட
4x ½ =2 புள்ளிகள்
(காரணங்கள் குறிப்பிட
4x ½ =2 புள்ளிகள்

02. 1) அ)
- மானிடப் பல்லினத் தன்மைகளுக்கு மதிப்பளித்தல்.
- மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு பங்களிப்பு செய்தல்.
- சமத்துவத் தன்மையுடன் கருமமாற்றுதலும், சமமான சந்தர்ப்பங்களை வழங்குதலும்.
- கல்வி, சுகாதாரம், போக்குவரத்து போன்ற அத்தியாவசிய தேவைகளுக்கு பங்களிப்பு செய்தல்.
- சமூக பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பங்களிப்பு செய்தல்.
- பல்லினத்தன்மை கொண்ட கலாச்சாரத்திற்கு மதிப்பளித்தலும் அவற்றை பாதுகாப்பதற்கு பங்களிப்பு செய்தலும்.
- சட்டத்தையும், சமாதானத்தையும் பாதுகாப்பதற்கு பங்களிப்பு செய்தல்.

(2x ½ =2 புள்ளிகள்)

ஆ)
- உற்பத்தி
- நுகர்வு

(2x½ =1 புள்ளி)

- மீள்சுழற்சி (Recycle)
  மீள்பாவனை (Reuse)
  பாவனைக்குறைப்பு (Reduce)
  மீள் உருவாக்கம் (Replace)

(எவையேனும் 2x½ =1 புள்ளி)

2) அ) முதியோரை மதித்தல்
முதியோரை பராமரித்தல் / உதவுதல்

(2x1 =2புள்ளிகள்)

ஆ)
- முதியோர் இல்லம் தொடர்பான நம்பிக்கை உயர்வடையும்.
- முதியோரை கவர்ந்து கவனமாக பராமரிக்க முடிதல்.
- கணக்கீட்டு முறை, நிதி மோசடிகள் என்பவற்றை தவிர்த்து நேர்மையாக நடாத்த முடிதல்.
- ஊழியர்களை கவர்ந்து சிறந்த சேவையினை பெற முடிதல்.

(4x½ =2 புள்ளிகள்)

3) அ)
- சந்தையில் பொருள் சேவைகள் பரவலாகக் காணப்படல்.
- போட்டித்தன்மை அதிகரித்திருப்பதனால் சந்தையில் மோசடிகள் அதிகரித்திருப்பதற்கான சந்தர்ப்பம் அதிகமாக இருத்தல்.
- சுதந்திரமான வியாபாரம் காரணமாக சந்தை சிக்கல் கொண்டதாக காணப்படல்.
- பூகோள மயமாதலுடன் ஏற்படக்கூடிய கலாச்சார சீரழிவுகள்.
- சூழல் மாசடைதலைத் தவிர்ப்பதற்காக நுகர்வோர்களை அறியச் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி இருத்தல்.

(2x ½ =2 புள்ளிகள்)

ஆ)
- செலுத்தப்படும் பணத்திற்கு ஏற்ற பெறுமானமுள்ள பொருள் கிடைப்பதற்கு நுகர்வோருக்கு சந்தர்ப்பம் கிடைத்தல்.
- சந்தை மோசடிகளிலிருந்து பாதுகாப்புப் பெறல்.
- தரமான பொருட்கள் சேவைகளை நுகர்வு செய்வதன் காரணமாக நுகர்வோர் தேகாரோக்கியத்தையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்துதல்.
- தேவையான சந்தர்ப்பங்களின் போது நுகர்வோர் பாதுகாப்பிற்காக சட்டரீதியான பாதுகாப்பு கிடைக்கப்பெறல்.
- நுகர்வோர் வாழ்வதற்கு பொருத்தமான சூழல் நிலைமையொன்று ஏற்படல்.

(4x½ =2 புள்ளிகள்)

4) அ) • பங்குடமை வணிகம் (1 புள்ளி)

- 1918 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க வியாபால பெயர் பதிவு கட்டளைச்சட்டம் (1 புள்ளி)

ஆ) • வரையறுத்த சொந்த கம்பனி / வரையறுத்த பொதுக்கம்பனி (1 புள்ளி)

- பாரியளவு மூலதனத்தினை திரட்ட முடிதல்.
- நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்டிருத்தல்.
- சட்ட ஆளுமை கிடைக்கப்பெறல்.
- நீடித்த வாழ்வுடையதாக இருத்தல்.
- உயர்மட்ட மனித வளங்களை ஒன்றினைக்க முடிதல். (4x½ =2 புள்ளிகள்)

5) அ) • அங்கீகாரம் வழங்குபவரின் நன்மதிப்பின் கீழ் பாரிய சந்தைகளைப் பெற முடிதல்.

- பிரசித்தி பெற்ற வியாபார பெயர் காரணமாக விளம்பரம் செய்தல் இலகுவாக அமைதல்.
- அங்கீகாரம் வழங்குபவரிடமிருந்து முகாமைத்துவப் பயிற்சி கிடைக்கப்பெறல்.
- அங்கீகாரம் வழங்குபவரிடமிருந்து நிதி வசதிகளைப் பெற முடிதல்.
- மூலப்பொருட்களை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள முடிதல்.

(4x½ =2 புள்ளிகள்)

ஆ)• பெறுபவர் வியாபார பெயரினை தவறுதலாகப் பயன்படுத்துதல்.

- உற்பத்திப் பொருட்களின் தரங்களை பெறுபவர் குறைந்து உற்பத்தி செய்தல்.
- வழங்குபவர் அனுமதியளிக்காத வழங்குனரிடம் பொருட்களை கொள்வனவு செய்தல்.
- பெறுபவர் அங்கீகார ஒப்பந்த நிபந்தனைகளை மீறுதல்.

(4x½ =2 புள்ளிகள்)

03. 1) அ)

| **முயற்சியாளர் - யதீசன்** | **வணிகர் - நிதிஷன்** |
|---|---|
| • தனது எண்ணங்களுக்கமைய வணிகத்தினை ஆரம்பித்தல். | • நடைமுறையில் காணப்படும் கருத்துக்கமைய வணிகத்தினை ஆரம்பித்தல். |
| • அவரது வணிகத்திற்கு அவரே போட்டியாளர். | • போட்டியாளர் பலர் காணப்படுவர். |
| • புதிய வணிக வாய்ப்பு தொடர்பாக ஆயத்தமாவர். | • தனது வணிகக் கருமங்கள் தொடர்பில் தொடர்ச்சியாக கவனம் செலுத்துவர். |
| • புத்தாக்கம் புனைபவர் | • பாரம்பரியத்தை பின்பற்றுபவர் |
| • இடர்களுக்கு முகம்கொடுப்பவர் | • பாதுகாப்பான முறையில் கருமங்களை மேற்கொள்பவர். |
| • பிரச்சினைகளுக்கு சிறப்பாக முகம் கொடுப்பவர். | • பிரச்சினை ஏற்படும் பொழுது உற்சாகமிழப்பார். |

(4x½ =2 புள்ளிகள்)

ஆ) • சுய மதிப்பீடு

- பயிற்சி
- கல்வி
- அனுபவங்களின் மூலம் பலனைப் பெற்றுக்கொள்ளல்.

(4x½ =2 புள்ளிகள்)

2) அ)

| சேமிப்பு வைப்பு | நிலையான வைப்பு |
|---|---|
| • வட்டி வீதம் குறைவு | • வட்டி வீதம் அதிகம் |
| • சேமிப்பு புத்தகம் வழங்கப்படும் | • நிலையான வைப்பு சான்றிதழ் வழங்கப்படும் |
| • வட்டி நிலையானதல்ல | • குறிப்பிட்ட காலம்வரை வட்டி நிலையானது |
| • கால வரையறையற்றது | • கால வரையறை உடையது |
| • மிகக் குறைந்த பணத்துடன் ஆரம்பிக்க முடியும். | • குறித்த தொகைக்கு மட்டுமே ஆரம்பிக்க முடியும். |
| • விரும்பிய போதும் வைப்பிடலிடவும் மீளப் பெறவும் முடியும். | • விரும்பிய போது, வைப்பிலிடவும் மீளப் பெறவும் முடியாது. |

(4x½ =2 புள்ளிகள்)

ஆ)

| வங்கிக்கடன் | வங்கி மேலதிகபற்று |
|---|---|
| • குறித்த தொகை குறித்த காலத்திற்கென பெறப்படும். | • வேறுபட்ட தொகை, அவசர தேவைகளுக்கு பெறப்படும். |
| • குறிப்பிட்ட காரணத்திற்கென வழங்கப்படும். | • அவ்வாறில்லை |
| • வங்கி, நிதி நிறுவனங்களிடம் பெற முடிதல். | • வணிக வங்கிகளின் நடைமுறைக் கணக்கு உரிமையாளர்கள் மட்டும் பெறமுடிதல். |
| • வட்டி குறைவு | • வட்டி அதிகம் |
| • பிணை அவசியம் | • பிணை அவசியமற்றது. |

(4x½ =2 புள்ளிகள்)

3) அ) வரைபவர் - J.ஜெஸ்லி டேவிட்
பெறுபவர் - உ.சிந்துஜன்
வரையுணி - இலங்கை வங்கி, சாவகச்சேரி

(3x½ =1 ½ புள்ளி)

ஆ) மக்கள் வங்கி வவுனியா - ½ புள்ளி

இ) 003249927 - ½ புள்ளி

ஈ) சாட்டுதல் செய்ய முடியாது - கட்டளைக்காசோலையாக இருத்தல். (1 புள்ளி)

உ) சிறப்பு முறை குறுக்குக் கோடிடல் - ½ புள்னி

4) அ) உரிமையாளரது ஆயுள் அபாயம் - ஆயுள் காப்புறுதி
தீயபாயம் - தீயபாய காப்புறுதி
களவபாயம் - களலபாயக் காறுதி
இயற்கை அனர்த்தம் - இயற்கை அனர்த்தக்காப்புறுதி
கடலபாயம் - கடலபாயக் காப்புறுதி
மோட்டார் வாகன காப்புறுதி - மோட்டார் வாகன காப்புறுதி
ஏனைய பிரிவினருக்கான இழப்புக்கள் - பொறுப்புக்காப்புறுதி
பொருள் ஏற்றியிறக்கல் சேதங்கள் - வழிச்சரக்கு காப்புறுதி
பணத்தினை நகர்த்தும் அபாயம் - வழிப்பணக் காப்புறுதி

(4x½ =2 புள்ளிகள்)

ஆ) • வணிகக் கொடுக்கல் வாங்கல்களின் போது குறிப்பிட்ட பிரிவினர்களுக்கிடையே கருத்துக்களைப் பரிமாற்றிக் கொள்வதற்காக.
- சேவை வழங்குனர், சேவை பெறுநர் ஆகியோர்களுக்கிடையிலான தொடர்பினைப் பேணல்.
- மானிட பௌதீக வளங்களைச் சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்வதற்கு.
- விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்காக.

(4x½ =2 புள்ளிகள்)

5) அ) • உல்லாச பிரயாணிகளின் வருகையினால் பிரதேச அபிவிருத்தி ஏற்படுதல்.
- விமான நிலைய செயற்பாடுகளினால் நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு கிடைத்தல்.
- உள்ளூர் உற்பத்திகளுக்கு சர்வதேச சந்தைகள் கிடைக்கப்பெறல்.
- கற்கைக்கான சந்தர்ப்பங்களும், ஆராய்ச்சி அபிவிருத்திச் செயற்பாடுகளும் விருத்தியுறுதல்.
- நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகள் விருத்தியுறுவதால் மக்களின் வாழ்க்கை தரம் உயர்வடைதல்.
- அயல் நாடுகளுடனான உறவு வலுவடையும்.
- புதிய முதலீட்டு வாய்ப்புக்கள் கிடைக்கப்பெறல்.

(4x½ =2 புள்ளிகள்)

04. 1) அ) • இருப்புக்கள் கிடைக்கப்பெறல்
- இருப்புக்களை இனம் காணுதல்.
- இருப்புக்கான பரீட்சித்தல்.
- தரத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளல்.
- பொருத்தமற்றவற்றை அகற்றுதல்.
- உற்பத்திக்காக வழங்குதல்.

(4x ½ =2 புள்ளிகள்)

ஆ) • கட்டட அமைப்பும் திட்ட வசதிகளும்.
- பொருள் பயன்பாட்டு வேகம்.
- பிரதான தொடர்புகளுக்கு அண்மித்ததாக இருத்தல்.
- பொருட்களை இடம்மாற்றும் திறன்.
- களஞ்சியப்படுத்தும் பொருட்களின் தன்மை.
- பொருள் கையாளுகை தொடர்பான மொத்தக்கிரயம்.

(4x½ =2 புள்ளிகள்)

2) அ) **உள்நோக்கிய அமையவியல் :-**

மூலப்பொருள் வழங்குனரிடமிருந்து அவற்றைக் கொள்வனவு செய்து, உற்பத்தி தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் சந்தர்ப்பம் வரையான அசைவுகள்.

(1 புள்ளி)

**வெளிநோக்கிய அமையவியல் :-**

உற்பத்தி செயன்முறைகள் பூர்த்தியாக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இருந்து அவை இறுதி நுகர்வோருக்கு வழங்கும் சந்தர்ப்பம் வரையான அசைவுகள்.

(1 புள்ளி)

ஆ) • உற்பத்திகளை தொடர்ச்சியாக சந்தைகளுக்கு வழங்குவதன் மூலம், நுகர்வோரின் நம்பிக்கைகளைப் பெறமுடிதல்.
- செலவுக்கருமங்களை திட்டமிட்டு மேற்கொள்வதனால் வீணாதல், விரயமாதல் என்பன குறைவதன் காரணமாக கிரயத்தை இழிபடுத்திக் கொள்ள முடிதல்.
- போட்டிகளுக்கு சிறப்பாக முகம் கொடுக்க முடிதல்.
- இயந்திர உபகரணங்கள், ஊழியர்கள் சார்பாக ஏற்படும் நேர் செலவுகளை இழிவுபடுத்திக் கொள்ள முடிதல்.
- உற்பத்திகளின் தரத்தினைப் பாதுகாத்துக் கொள்ள முடிதல்.
- மூலப்பொருள் முகாமைத்துவம் நல்ல முறையில் இடம்பெறுவதனால் பிரச்சினைகள் ஏற்படாதிருத்தல்.
- தொழிலில் தலைவராக ருவாக முடிதல்.

(4x½ =2 புள்ளிகள்)

3) அ) சயந்தன் - தரகு முகவர்
சங்கர் - தரகர்
சாருஜன் - பொறுப்பு முகவர்
வில்டன் - காரணீகர்

(4x½ =2 புள்ளிகள்)

ஆ) • அறுவடை, களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்தின் போது நவீன முறைகளை சரியாகப் பயன்படுத்தாமை.
- குறைந்த உற்பத்தித்திறன்.
- உள்ளீடுகளுக்கான செலவுகள் அதிகரித்துவிடுதல்.
- விவசாய அமைப்புக்கள் விலைகளை அதிகரித்துவிடுதல்.
- நட்டங்களை ஈடுகொடுப்பதற்கு உயர்ந்த விலை நிர்ணயித்தல்.
- அதிக இடைநடுவர்கள் காணப்படல்.
- மழை போன்ற இயற்கை காரணிகள்.

(4x½ =2 புள்ளிகள்)

4) அ) • மிகை உற்பத்திகளை ஏற்றமதி செய்ய முடிதல்.
- நாட்டில் உற்பத்தி செய்ய முடியாத உற்பத்திகளை இறக்குமதி செய்ய முடிதல்.
- வெளிநாட்டு நாணயமாற்றினை உழைத்துக்கொள்ள முடிதல்.
- பொருளாதார ரீதியாக சிக்கனங்களைப் பெற்றுக்கொள்ள முடிதல்.
- சர்வதேச ஒத்துழைப்புக்கள் விருத்தியடைதல்.
- புதிய தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ தேர்ச்சிகள் விருத்தியுறுதல்.

(4x½ =2 புள்ளிகள்)

ஆ) • தீர்வை வரி
- இறக்குமதி மட்டுப்பாடு
- ஏற்றுமதி மட்டுப்பாடு
- ஏற்றுமதி / இறக்குமதி தடை
- வியாபார ஒப்பந்தம்.
- கடுமையான செலவாணிக் கொள்கை.

(4x½ =2 புள்ளிகள்)

5) அ) ஏற்றுமதியாளரது பொருட்கள் கப்பலில் ஒப்படைக்கப்படுகையில் கப்பல் கம்பனியால் வழங்கப்படுதல் சுமைச்சீட்டு எனவும், இது குற்றமுடையதாக இருப்பின் தூய சுமைச்சீட்டாக மாற்றுவதற்கு ஏற்றப்பட்ட பொருட்கள் தொடர்பான அனைத்து நட்டங்களுக்கும் ஏற்றுமதியாளனே பொறுப்பு எனக் குறிப்பிட்டு கப்பல் கம்பனிக்கு வழங்கும் கடிதம் நட்ட ஈட்டுக்கடிதம் ஆகும். .

*(2 புள்ளிகள்)*

ஆ) இறக்குமதியாளரால் தான் இறக்குமதி செய்ய இருக்கும் பொருள் தொடர்பான விலை விபரங்களை விசாரித்து ஏற்றுமதியாளருக்கு அனுப்பும் ஆவணமே விலை விசாரணைக் கடிதம் என்பதுடன் இதற்கு பதிலாக ஏற்றுமதியாளரால் இறக்குமதியாளருக்கு அனுப்பப்படும் ஆவணமே விலைக்கூற்று என்பதாகும்.

*(2 புள்ளிகள்)*

05. 1) அ) திட்டமிடல் :- நோக்கத்தினை உருவாக்கல்
திகதி நிர்ணயம்
பார்வையிடும் இடங்களை நிர்ணயித்தல்
தங்குமிட, உணவு தீர்மானம்
உத்தேச செலவு மதிப்பீடு

ஒழுங்கமைத்தல் :- முன்னாயத்தம்
நடவடிக்கைகளை இனம்காணல்
பணிகளை குழுக்களிடம் ஒப்படைத்தல்.
நிதி அனுசரணை நடவடிக்கைகள்
தேவைப்படும் வளங்களை ஒதுக்குதல்.

நெறிப்படுத்தல் :- நீதி கையாளுகை,
பொறுப்பானவர்களை நியமித்தல்
விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
உற்சாகத்துடன் நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

கட்டுப்படுத்தல் :- உரிய நேரத்திற்கு புறப்படுவதனை உறுதி செய்தல்.
உரிய காலத்தில் நிறைவு செய்தல்.
வரவு செலவுத்திட்ட அறிக்கை தயார் செய்தல்.
பின்னூட்டல்களைப் பெறல்.

(4x½ =2 புள்ளிகள்)

ஆ)
- சுற்றுலாவின் இலக்கு மற்றும் நோக்கங்களை வெற்றிகரமாக அடைவதற்கு.
- வரையறுக்கப்பட்ட வளங்களை விளைதிறனாகவும், பயனுறுதியாகவும் பயன்படுத்துவதற்கு.
- இயங்கு வணிக சூழலில் வெற்றிகரமாக துலங்குவதற்கு.
- எதிர்பாராத தடைகளுக்கு முகம் கொடுப்பதற்கு.
- பிரச்சினைகளுக்கு வெற்றிகரமாக முகம் கொடுப்பதற்கு.

(4x½ =2 புள்ளிகள்)

2) 1) தகவல் வகிபாகம் - தகவல் வழங்குபவர்
2) தீர்மானமெடுத்தல் வகிபாகம் - வள ஒதுக்கீட்டாளர்
3) ஆளிடைவகிபாகம் - தலைவர்
4) தீர்மானமெடுத்தல் வகிபாகம் - தடைக்களைக்கையாளுபவர்

(4x1 =4 புள்ளிகள்)

3) அ)
- நிறுவனத்தின் உத்தேச நோக்கங்கள், இலக்குகளை, வெற்றிகரமாக அடைந்து கொள்வதற்கு உதவுதல்.
- திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு அடிப்படையொன்றாக அமைதல்.
- வேலைப்பகிர்வினூடாக உருவாகின்ற வேலைச்சிறப்புத் தேர்ச்சி காரணமாக உற்பத்திதிறனை உயர்த்திக்கொள்ள முடிதல்.
- பதவி, அதிகாரம் மற்றும் பொறுப்புக்களை பகிர்ந்தளிப்பதன் ஊடாக பதவிகளுக்குரிய கருமங்களை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்ள முடிதல்.
- வேலைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான வளங்கபை் பகிர்ந்தளிப்பதன் மூலம் வளங்களிலிருந்து உச்சப்பயனைப் பெற்றுக்கொள்ள முடிதல்.
- நிறுவனத்தின் சகல செயற்பாடுகளையும் அதன் நோக்கத்தை அடைந்து கொள்ளும் பொருட்டு ஈடுபடுத்துவதனூடாக தனிநபர்களுக்கும் குழுக்களுக்கும் திணைக்களங்களுக்குமிடையில் இணைப்பாக்கம் ஒன்று உருவாதல்.

(4x½ =2 புள்ளிகள்)

ஆ)
- பொருத்தமற்ற முறையில் பணிகளினை இனம் காணுதல்.
- பொருத்தமற்ற தொழிற்பிரிப்பு
- பொருத்தமற்ற திணைக்களப்படுத்தல்.
- அதிகார கையளிப்பு போதுமானதாக இல்லாமை.
- நியாயமற்ற அதிகாரம்.
- கட்டளையிடலில் ஓரினத்தன்மையில் சிக்கல் நிலவுதல்.
- பொருத்தமற்ற முகாமைத்துவ விசாலம்.
- வளங்களை தேவைக்கேற்ப பங்கிடாமை.
- பொருத்தமற்ற ஒருங்கிணைவு.

(4x½ =2 புள்ளிகள்)

4) அ) நிறுவனத்தின் பதவிகள், கருமங்கள், அதிகாரங்கள், பொறுப்பு, வகை கூறல் என்பவை பிரிந்து சென்றுள்ள முறை மற்றும் இணைப்பாக்கம் செய்யப்பட்டுள்ள முறை நிறுவனக் கட்டமைப்பு என்பதாகும்.

(2 புள்ளிகள்)

ஆ)
- நிறுவன திணைக்களப்பிரிவுகளை கண்டுகொள்ள முடிதல்.
- அதிகாரம், பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள முறைகளை அறிதல்.
- ஒவ்வொரு ஊழியரும் தனது வேலைத்தலத்தினை அறிய முடிதல்.
- தனது நேரடிக் கண்காணிப்பாளரை அறிய முடிதல்.
- தொடர்பாடல் முறைகளை அறிய முடிதல்.
- அதிகாரம் மையப்படுத்தியதா / பன்முகப்படுத்தியதா என அறிய முடிதல்.
- கட்டளைச்சங்கிலியினை அறிய முடிதல்.

(4x½ =2 புள்ளிகள்)

5) அ) • நிறுவனத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோள்களை நிறுவுவதற்கும், திட்டங்களைத் தயாரிப்பதற்கும்.

- நிறுவனக் கருமங்களை சிறந்த முறையில் ஒழுங்குபடுத்துவதற்கு.
- தீர்மானமெடுத்தலுக்கு தேவையான தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு.
- மனித வளத்தை முகாமைத்துவம் செய்வதற்கு.
- நிறுவனத்தின் முழுமையான கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு.
- நிறுவனத்தின் அனைத்துச் செயற்பாடுகளின் போதும் தெளிவான தன்மையினை ஏற்படுத்துவதற்கு.
- முகாமையாளர்களின் அன்றாடக்கருமங்களில் கூடுதலானவை தொடர்பாடலுடன் இணைந்து காணப்படல்.

(4x½ =2 புள்ளிகள்)

ஆ) **மேலிருந்து கீழ் :-**

- முகாமைத்தீர்மானங்கள்.
- அதிகார கையளிப்பு
- தொழிற்பிரிப்பு
- ஒருங்கிணைப்பு
- பாராட்டுதலும், புகழ்ச்சியும் (2x½ =1 புள்ளி)

**கீழிருந்து மேல் :-**

- வகை கூறல்.
- ஊழியர் மனத்தாங்கல்
- ஊழியர் முரண்பாடு
- வேலை முறைப்பாடு
- ஊழியர் ஆலோசனை. (2x½ =1 புள்ளி)

06. 1) அ) • உயர்தரத்திலான பொருட்களையும், சேவைகளையம் உற்பத்தி செய்ய முடிதல்.

- செயற்பாட்டு செயன்முறையின் வினைதிறனையும், பயனுறுதியினையும் அதிகரிக்க முடிதல்.
- உற்பத்திக் கிரயத்தை இழிவுபடுத்தக்கூடியதாக இருப்பதோடு இலாபத்தையும் அதிகிக்க முடிதல்.
- பூகோளமய வணிகச்சூழலினுள்ள போட்டி நிலைமைகளுக்கு வெற்றிகரமாக முகம் கொடுக்கக்கூடியதாக இருத்தல்.
- புத்துருவாக்கத்துடன் கூடிய பொருட்கள், சேவைகளை அறிமுகப்படுத்த முடிதல்.
- சமூகப் பொறுப்புக்களை சரியான முறையில் நிறைவேற்றுவதன் ஊடாக வணிகத்தினதும் நாட்டினதும் நிலைபேறான விருத்திக்கு பங்களிப்பினைப் பெற்றுக் கொடுக்க முடிதல்.

(4x½ =2 புள்ளிகள்)

ஆ) • வாடிக்கையாளர்களை உருவாக்குவதற்கும் அவர்களை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வதற்கும்.

- அதிகாரம், பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள முறைகளை அறிதல்.
- நிறுவனம் வெற்றியடைவதற்கும் அதனைத் தொடர்ந்து பேணுவதற்கும்.

- இலாபம் பெறுவதைத் தொடர்ச்சியாகப் பேணுவதற்கு.
- உரிமையாளர்களினதும், ஊழியர்களினதும் திருப்தியை மேம்படுத்துவதற்கு.
- போட்டிக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கு.
- சந்தைப்பங்கினை விரிவுபடுத்துவதற்கு.

(4x½ =2 புள்ளிகள்)

2) அ) $EOQ = \sqrt{\frac{2D\,Co}{Ch}}$

$= \sqrt{\frac{2\times10000\times3}{2}}$

$= 173$ units// (1 புள்ளி)

ஆ) இலாபம் $= 10{,}00{,}000 - (600{,}000 + 200{,}000)$

$= 200{,}000$ ரூபா (1 புள்ளி)

இ) பங்களிப்பு = அலகுவிற்பனை விலை – அலகு மாறும் செலவு

$= 100 - 60$

$= 40$ ரூபா (1 புள்ளி)

ஈ) சமப்பாட்டுப்புள்ளி = $\frac{\text{மொத்த நிலையான செலவு}}{\text{அலகுக்கான பங்களிப்பு}}$

$= \frac{200{,}000}{40}$

$= 5000$ அலகுகள் (1 புள்ளி)

3) அ)
- செயன்முறைத்தள அமைப்பு
- உற்பத்தி பொருள் தள அமைப்பு
- கல / சிறு அலகுத்தள அமைப்பு.
- நிலையான இடத்தள அமைப்பு

(4x½ =2 புள்ளிகள்)

ஆ)
- பொருட்கள் மற்றும் இயந்திரங்களைப் பயன்படுத்துவதன் வினைத்திறன் உயர்வடையும்.
- இடவசதிகளில் உச்சப்பயன்பாட்டினைப் பெற்றுக்கொள்ள முடிதல்.
- பொருட்களைப் பயன்படுத்தும் கிரயத்தினைக் குறைத்துக் கொள்ள முடிதல்.
- பொருட்கள் மற்றும் ஊழியர்களின் அசைவின் போது ஏற்படும் தடைகளைக் குறைத்துக்கொள்ள முடிதல்.
- விபத்துக்கள் குறைவடைதல்
- தொடர்பாடல், இணைப்பாக்கம், மேற்பார்வை என்பன இலகுவாதல்.
- ஊழியர்களின் தன்னம்பிக்கை உயர்வடையும்.
- காலத்தை / நேரத்தை முகாமை செய்வதற்கு இலகுவாக அமைதல்.

(4x½ =2 புள்ளிகள்)

4) அ) பூகோள ரீதியான காரணிகள் - காலநிலைக் காரணிகள்
சமூக ரீதியான காரணிகள் - ஆண், பெண் பால் வேறுபாடு
உளவியல் காரணிகள் - வாழ்க்கைப் பாங்கு
நடத்தைக் காரணிகள் - பயன்படுத்துவோர் மனப்பாங்கு

(4x½ =2 புள்ளிகள்)

ஆ)
- அளவிடக்கூடியதாக இருத்தல்.
- அடைந்து கொள்ளக்கூடிய தன்மை.
- தேவையான அளவினைக் கொண்டிருத்தல்.
- வேறுபடுத்தி இனம் காணக்கூடியதாக இருத்தல்.
- செயற்படுத்தக்கூடியதாக இருத்தல்.

(4x½ =2 புள்ளிகள்)

5) அ) இலக்குச்சந்தை (Target market)

முழுமையான சந்தையில் இருக்கின்ற பல்வேறு பண்புகளைக் கொண்ட வாடிக்கையாளர்களை இனங்கண்டு அவர்களில் நிறுவனத்திற்கு மிகவும் ஈர்ப்புத்தன்மையுடனும் இலாபத்தன்மையாகவும் சேவை செய்யக்கூடிய சந்தைப்பங்கே இலகுச்சந்தை எனப்படும். (2 புள்ளிகள்)

ஆ) சந்தையில் நிலைப்படுத்தல் (Market positioning)

பொருளொன்று அல்லது சேவையொன்று தொடர்பாக நுகர்வோரின் மனதில் சாதகமான மனப்பாங்கொன்றினைக் கட்டியெழுப்புதலைக் குறிக்கும். ஏதேனும் பொருளொன்றை அல்லது சேவையொன்றை சந்தையில் மிகவும் சிறந்த முறையில் நிலைநிறுத்தச் செய்வதாகும். (2 புள்ளிகள்)

07. 1) அ)
- எண்ணங்கள் :- உண்பதற்கு முன்னர் கைகழுவுதல்
- நிகழ்தகவுகள் :- வருடாந்த கண்காட்சி
- அனுபவம் :- மலை ஏறுபவர்களுக்கு பயிற்சி வழங்கல்
- தனிநபர் :- சிரிப்பு நடிகர்
- இடம் :- சிகிரியா
- அமைப்புக்கள் :- உடற்பயிற்சி கழகம்
- ஆதனம் :- காணி உறுதி
- தகவல் :- பண்டைய கால சுவடிகள்

(பொருத்தமான வேறு உதாரணங்களைக் கருத்தில் கொள்க)

(4x½ =2 புள்ளிகள்)

ஆ)
- விற்பனையினை அதிகரிப்பதன் மூலம் இலாபத்தினை உயர்த்த முடிதல்.
- நிறுவன நன்மதிப்பு அதிகரித்தல்.
- ஒரு உற்பத்தியில் ஏற்படும் நட்டத்தை பிறிதொரு உற்பத்தியின் மூலமும் ஈடுசெய்ய முடிதல்.
- சந்தை விரிவுபடுத்தப்படல்.
- போக்குவரத்து, விநியோக செலவினங்களை குறைக்க முடிதல்.
- ஏற்கனவே பிரபல்யம் பெற்ற வியாபார குறியின் ஊடாக புதிய பொருட்களை சந்தையில் இலகுவில் அறிமுகப்படுத்த முடிதல்.
- பல்வேறுபட்ட வாடிக்கையாளர்களையும் கவர்ந்துவிட முடிதல்.

(4x½ =2 புள்ளிகள்)

2) அ) பொருளொன்றை அல்லது சேவையொன்றைப் பெற்றுக்கொள்ளல் அல்லது பயன்படுத்துவதன் மூலம் நுகர்வோர் பெற்றுக்கொள்ளும் அனுகூலங்கள் மற்றும் திருப்தி என்பனவற்றுக்காக பரிமாற்றம் செய்வதற்கு விரும்பும் பெறுமானம் விலை ஆகும். *(1 புள்ளி)*

சந்தைப்படுத்தல் கலவை மாறிகளில் (4P) விலை தவிர்ந்த ஏனைய மாறிகள் (உற்பத்தி, இடம், மேம்படுத்தல்) செலவுகளை பிரதிநிதித்துவப்படுத்துமெனவும் நிறுவனத்திற்கு வருமானத்தினை ஈட்டித்தரும் ஒரே ஒரு மாறியே விலை என்பதாகும். *(1 புள்ளி)*

ஆ)
- சந்தையில் நிலைத்திருத்தல் / நீடிய வாழ்தன்மை
- சமகால இலாபத்தை உச்சப்படுத்துதல்.
- சந்தைப்பங்கை உச்சப்படுத்தல்.
- சந்தையின் சாரத்தை உறிஞ்சிக் கொள்ளல்.
- உற்பத்திப் பொருள் தர தலைமைத்துவம்.

(4x½ =2 புள்ளிகள்)

3) அ) கம்பனியொன்றின் பெறுமானம் அல்லது பெறுமதி அதிகரிக்கும் பொழுது கம்பனியில் பங்குகளின் விலை உயர்வடைந்து செல்வது உரிமையாளரின் பெறுமானம் அதிகரிப்பதைக் காட்டுகின்றது. *(2 புள்ளிகள்)*

ஆ)
- இலாபத்தை உச்சப்படுத்துதல்
- பங்கொன்றின் உழைப்பினை உச்சப்படுத்துதல்
- நீண்டகால நிதி உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்தல்
- திரவத்தன்மையை சிறந்த மட்டத்தில் பேணிச்செல்லல்.

(4x½ =2 புள்ளிகள்)

4) அ) *1.* மொத்த இலாபவீதம் $= \frac{\text{மொத்த இலாபம்}}{\text{விற்பனை}} \times 100$

$= \frac{4,000,000}{10,000,000} \times 100$

$= 40\%$

(½ புள்ளி)

*2.* தேறிய இலாபவீதம் $= \frac{\text{தேறிய இலாபம்}}{\text{விற்பனை}} \times 100$

$= \frac{3,000,000}{10,000,000} \times 100$

$= 30\%$ (½ புள்ளி)

*3.* நடைமுறை விகிதம்$= \frac{\text{நடைமுறைச் சொத்துக்கள்}}{\text{நடைமுறைப் பொறுப்புக்கள்}}$

$= \frac{4,000,000}{1,000,000}$

$= 4 : 1$ (½ புள்ளி)

4. இருப்பு புரள்வு விகிதம் = $\frac{\text{விற்பனைக் கிரயம்}}{\text{சராசரி இருப்பு}}$

$= \frac{6,000,000}{10,000,000}$

$= 6 : 1$ (½ புள்ளி)

ஆ) 1) திரவத்தன்மை 4 : 1 என அமைந்திருப்பதால் திரவத்தன்மை சிறப்பாக காணப்படுகின்றது. (1 புள்ளி)

2) இருப்புப்புரள்வு 6 : 1 ஆக அமைந்திருத்தலானது சராசரியாக 6 தடவைகள் இருப்பு புரள்வடைதலைக் காட்டுகின்றது. (1 புள்ளி)

5) அ) பட்டியற்படுத்தப்பட்ட கம்பனிகளின் பங்குகளைக் கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல் என்பவற்றை கண்காணிக்கின்ற நிறுவனம் கொழும்பு பங்கு பரிமாற்றகம் என்பதாகும்.

(2 புள்ளிகள்)

ஆ)
- தனிநபர்களையும், நிறுவனங்களையும் முதலீட்டிற்காக ஊக்குவித்தல்.
- முதலீட்டாளர்களுக்கு கொழும்பு பங்குபரிமாற்றகத்தினூடாக பல்வேறு அனு கூலங்களைப் பெற்றுக்கொள்ள முடிதல்.
- கம்பனிகளுக்கு பாரியளவு மூலதனத்தைத் திரட்டிக் கொள்ள முடிதல்.
- கம்பனிகளின் பங்குகளுக்கு இரண்டாம் தர சந்தைகள் உருவாகுதல்.
- வெளிநாட்டு முதலீட்டாளர்களை நாட்டிற்குள் ஈர்த்துக்கொள்ள முடிதல்.
- அரசின் பிணைப்பத்திரங்களை விற்பனை செய்வதனூடாக அரசிற்கு தேவையான நிதியினை பெற்றுக் கொள்ள முடிதல்.
- கம்பனியின் பங்குகளுக்கு பெறுமானம் ஒன்றை உருவாக்குதல்.
- கம்பனியின் நன்மதிப்பும், பிரதிவிம்பமும் உயர்வடையும்.

(4x½ =2 புள்ளிகள்)

08. 1) அ)
- சாதாரண பங்குகள்
- முன்னுரிமை பங்குகள்
- பங்கு ஆணைப்பத்திரங்கள்
- கூட்டிணைக்கப்பட்ட தொகுதிக்கடன்கள்
- அரச பிணைப்பத்திரங்கள்

(4x½ =2 புள்ளிகள்)

ஆ) **நேர் அனுகூலம் :-**
- பங்கு இலாபம்
- வட்டி
- ஒதுக்கங்களை மூலதனமாக்கல்.
- உரித்து வழங்கல் / உரிமை வழங்கல்
- மூலதன இலாபம்

(2x½ =1 புள்ளி)

ஆ) **நேரில் அனுகூலம் :-**

- சாதாரண பங்குதாரருக்கு வாக்களிக்கும் உரிமை கிடைப்பதன் ஊடே பணிப்பாளராகவும் வர முடிதல்.
- அரச பிணைப்பத்திரங்களைப் பெற்றவர்கள் அதனை பிணையாகவும் பயன்படுத்த முடிதல்.
- அரச பிணைப்பத்திர முதலீடு இடர் குறைவாக இருப்பதுடன், திரவத்தன்மையும் உயர்வாக இருத்தல்.
- பங்குகளின் மூலம் பெறும் மூலதன இலாபமானது வரிகளிலிருந்து விடுபட்டதாக இருத்தல்.
- பங்குகளுக்கு உயர்வான திரவத்தன்மை இருத்தல்.

(2x½ =1 புள்ளி)

2) அ) அமைப்பொன்றின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக மிகப்பொருத்தமானதாக ஊழியர் திருப்தியும் அபிவிருத்தியும் ஏற்படக்கூடியவாறு நிறுவனத்தின் மனிதவளங்களை வினைத்திறனாகவும், விளைதிறன் கொண்டதாகவும் ஈடுபடுத்திக் கொள்வது தொடர்பான செயற்பாட்டுத் தொகுதியே மனிதவள முகாமைத்துவம் என்பதாகும்.

*(2 புள்ளிகள்)*

ஆ)
- மனிதவளங்களே செயற்படுதன்மையினை கொண்டிருத்தல்.
- தீர்மானங்களை எடுப்பதுடன் பெறுமதி கொண்டவளமாகவும் இருத்தல்.
- போட்டிகளை வெற்றிகொண்டு வணிகத்தை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதாக இருத்தல்.
- நிறுவன சகல முகாமையாளர்களினதும் ஒருமைப்பாட்டினைக் கொண்டதாக இருத்தல்.
- முழுமையான சமூகத்தினதும் நலன் தொடர்பில் முக்கியத்துவம் கொண்டதாக இருத்தல்.
- தோன்றும் பிணக்குகளை இலகுவில் தீர்க்கத்தக்கதாக இருத்தல்

(4x½ =2 புள்ளிகள்)

3)

| **வேலை விபரணம்** | **வேலை குறித்துரைத்தல்** |
|---|---|
| • பதவியின் பெயர் | • கல்வித்தகமை |
| • திணைக்களம் | • தொழில்சார் தகமை |
| • தொழிலின்தன்மை | • தேகாரோக்கியம் |
| • பதவிக்குரிய பணிகள் | • அனுபவம் |
| • சேவை நிபந்தனைகள் | • சிறப்புத் தேர்ச்சிகள் |
| • வேலை செய்யும் காலம் | • மொழி அறிவு |
| • வகை கூறல் | • மனப்பாங்கும் ஈடுபாடும் |
| • மேற்பார்வை | • பொது அறிவு |
| • செயற்திறன் மதிப்பீடு | • நுண்மதி மட்டம் |
| • நிரந்தரமாக்கல் | |
| (4x½ =2புள்ளிகள்) | (4x½ =2புள்ளிகள்) |

4) அ)
- குறித்த பொருள் / சேவைக்கான கேள்வி
- நிறுவன நோக்கங்கள்
- உற்பத்தி முறை
- எதிர்கால ஊழியர் ஓய்வு பெற்றுச்செல்லல்.
- விலகுதல், பதவி உயர்வு பெறல், நீக்குதல், சேவையினை முடிவுறுத்தல்.
- நிறுவனத்தின் நிகழ்கால மற்றும் எதிர்கால நிதி நிலைமை.
- பொருளாதார, சமூக, அரசியல், சட்ட சூழல்கள்.

(4x½ =2புள்ளிகள்)

ஆ)
- எதிர்கால மனிதவளங்களின் தேவைகளை உறுதிப்படுத்திக் கொள்ள முடிதல்.
- ஊழியர் புரள்வை குறைக்க முடிதல்.
- அவசர ஆட்சேர்ப்பினால் ஏற்படும் தேவையற்ற கிரயங்களை தவிர்த்துக் கொள்ள முடிதல்.
- மனிதவளத்தை கூடிய உற்பத்தித்திறனுடன், வினைத்திறனுடனும் பயன்படுத்திக் கொள்ள முடிதல்.
- ஏனைய முகாமைத்துவக் கருமங்களை எதிர்பார்க்கப்பட்டவாறு நெறிப்படுத்தக்கூடியதாக இருத்தல்.
- உயர் தேர்ச்சியுடன் கூடிய ஊழியர் விருத்தியடைதல். (4x½ =2புள்ளிகள்)

5) அ)
- உள்ளக ரீதியான ஆட்சேர்ப்பு
- வெளியக ரீதியான அட்சேர்ப்பு.

(2x1 =2புள்ளிகள்)

ஆ) **உள்ளக ஆட்சேர்ப்பு :-**
- வேலை அறிவித்தல்.
- திறன் / தகவல் அட்டவணை
- ஊழியர் சிபார்சு / பரிந்துரை
- மரபுரிமைத் திட்டம்

(2x ½ =2 புள்ளி)

**வெளியக ஆட்சேர்ப்பு :-**
- ஊடக விளம்பரம்
- இணையம் / வலையமைப்பு
- கடந்த கால ஊழியர் மூலம்
- கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில்சார் நிறுவனங்கள் மூலம்
- தொழில் முகவர் நிறுவனங்கள்
- தொழிர் சங்கம் மூலம்
- தொழிற் சந்தைகள் மூலம்

(2x ½ =2 புள்ளி)